

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், நேற்று (21.07.2025) சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், சர்க்கரைத் துறை இயக்குநர் த. அன்பழகன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக பதிவாளர் / துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் சு. தமிழ்வேந்தன், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை, இராணி மேரி கல்லூரியில் நேற்று (21.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் நிரப்பபடவுள்ள 574 கௌரவ விரிவுரையாளர்கள் பணி தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான இணையதள பதிவினை தொடங்கி வைத்தார். உடன் கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### நடப்புக் கல்வியாண்டில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில்

# 574 தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

*சென்னை, ஜூலை 22-*

சென்னை, இராணி மேரி கல்லூரியில் நேற்று (21.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் நிரப்பபடவுள்ள 574 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்ப பதிவு இணையதளத்தினை தொடங்கி வைத்தார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கான மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்று வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர்கல்வியினை பெற வேண்டும், அனைவருக்கும் சமமான உயர்கல்வி கிடைத்திட வேண்டும் என்பதற்காக, அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000க்கும் மேற்பட்ட மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன. இதில் நிரந்தர ஆசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை, மாணாக்கர்களுக்கான கல்வி கற்றலில் தொய்வு ஏற்படாமல் இருக்க 574 கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக பணியமர்த்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் உரிய கல்வித்தகுதியுடன் ஒளிவுமறைவற்ற முறையில், வெளிப்படைத் தன்மையுடன் நிரப்பிட கல்லூரிக் கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை *www.tngasa.org* என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். 34 பாடப்பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 574 பணியிடங்களின் விவரங்கள் மேற்கண்ட இணையதளத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளன.

தகுதியுள்ள நபர்கள் *www.tngasa.org* என்ற இணையதளத்தில் இன்று (21.07.2025) முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதி நாள் 04.08.2025 ஆகும். தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளைப் பின்பற்றியும், கல்வித்தகுதி மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பீடுகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 152 வது நாள்!

## அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது



*சென்னை, ஜூலை 22 -*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 152 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (21.7.2025) அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 87, வன்னியர் தெரு. 2) வட்டம் 89, கழக கட்சி அலுவலகம் டிவிஎஸ் காலனி பிரதான சாலை (சென்னை பப்ளிக் பள்ளி அருகில்) சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜ யகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### என்.கௌதமன் தலைமை! பி.என்.கார்த்தி வரவேற்புரை!

# நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## என்.இளையராஜா சிறப்புரை! க.இராஜேந்திரன் – ப.கோவிந்தராசன் பங்கேற்பு!

*நாகை, ஜூலை 22-*

நாகை மாவட்டம் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி வரவேற்றார்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், தமோதரன், கே.சுரேஷ், டேனியல்சத்தியா, பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், தாட்கோ தலைவர் என்.இளையராஜா கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா. குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், என்.சதாசிவம், சோ.பா. மலர்வண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து, பேரூர் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பரமணியன், முகமதுசுல்தான் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கலையரசன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் உத்தரவு படி நாகை மாவட்டத்தில் உள்ள பாகங்களுக்கு இளைஞர் அணி நிர்வாகிகளாக ஒரு அமைப்பாளரும், ஒன்றியத்தில் உடளள கிளைகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகளாக ஒரு அமைப்பாளர் மூன்று துணைஅமைப்பாளர்கள் என்றும், நகர கழகத்திற்கு இளைஞர் அணி நிர்வாகிகளாக வார்டுகளுக்கு ஒரு அமைப்பாளர்கள், 3 துணை அமைப்பாளர்களையும், பேரூர் கழகத்திற்கு இளைஞர் அணி நிர்வாகிகளாக வார்டுகளுக்கு ஒரு அமைப்பாளர்கள், 2 துணை அமைப்பாளர்களை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் வழிகாட்டுதலோடு நியமனம் செய்து பூர்த்தி செய்த படிவத்தை தலைமைக் கழகத்திற்கு அனுப்பிட உடன் மாவட்ட கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும்,

தலைமைக் கழக உத்தரவு படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சாரக் கூட்டம் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் கூட்டங்களை சிறப்பாக நடத்திட ஏற்பாடு செய்திட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கும், கூட்டத்தை சிறப்பாக நடத்திட்ட மாவட்டக் கழகச் செயலாளர், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் அனைவருக்கும் நன்றியையும், வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது என்றும்,

ஓரணியின் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கையில் கழகத்தினரோடு இளைஞர் அணியின் இணைந்து சிறப்பாக பணியாற்றிட வேண்டும் என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையும், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் மூத்த சகோதரர் மு.க.முத்து மறைவுக்கு இரங்களை தெரிவித்துக் கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளை மு.க. முத்து மறைவுக்கு இரங்கள் தெவித்து 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.



திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் ஒன்றியம் , வெள்ளியூரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ. 13 லட்சத்து 14 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நியாய விலைகடை 38 லட்சத்து 2 ஆயிரம் மதிப்பில் தார்சாலை அமைக்கும் பணியினை ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார் உடன் ஒன்றிய பொறுப்பாளர் டி.முரளிகிருஷ்ணன் அதிகாரிகள் அமுதா, கை.கூ. சண்முகம், செல்வகுமார் , மெல்கி ராஜாங்சிங், ஒன்றி நிர்வாகிகள் எம்.பர்கத்துல்லாகான், டி.தென்னவன், எஸ். மனோகரன், மதுரை வீரன், விமலாகுமார், பிராங்கிளின், எஸ்.வேலு, ஈக்காடு கே.முகமது ரபீக், கபிலன், பாலாஜி, சந்தோஷ், அஜித் குமார், தசரத நாயுடு, கன்னியப்பன், வெங்கடேசன், மூர்த்தி, வேலு, ஏழுமலை, கஜேந்திரன், குட்டி என்கிற கோவிந்தசாமி, ஜெய்சங்கர், யுவராணி, தெய்வநீதி, கிரிஜா, தேவி, ஜெயம்மாள், சதீஷ், சுரேஷ், ஆமோஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் பல்வேறு நலத்திட்ட உதவிகளால்

# விவசாயிகளின் காவலனாகப் போற்றப்பட்டு வருகிறார்!

## சேலத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம், ஜூலை. 22–

முதலமைச்சர் அவர்கள் கால்நடை வளர்ப்போரின் நலனை பாதுகாக்கவும். வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 50 சதவீத மானியத்தில் புல் நறுக்கும் கருவிகளை நேற்று வழங்கி தகவல் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் மின்விசையில் இயங்கும் புல்நறுக்கும் கருவிகளை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (21.07.2025) சேலம் ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறையும் வளர்ச்சி அடைந்து தன்னிறைவு பெற வேண்டும் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கால்நடை வளர்ப்போரின் நலனை பாதுகாக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்துள்ளார்கள்.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 16 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 14 கால்நடை பெரு மருத்துவமனைகள், 152 கால்நடை மருத்துவமனைகள், 2,741 கால்நடை மருந்தகங்கள், 56 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 815 கால்நடை கிளை நிலையங்கள் மூலமாக பல்வேறு நலத்திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் (NADP) கீழ் ரூ.75.83 இலட்சத்தில் 100 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஏழ்மை நிலையில் உள்ள 2,000 பயனாளிகளுக்கு ரூ.3.82 கோடி மதிப்பீட்டில் 100% மானியத்தில் தலா 5 வெள்ளாடு, செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டுக்கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புற பயனாளிகளுக்கு நாட்டுக் கோழி பண்ணை நிறுவ 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று 110 ஏக்கரில் ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் மாநில தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் 50% மானியத்தில் 400 பயனாளிகளுக்கு புல் நறுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற பெண்களுக்கு நாட்டின கோழிக்குஞ்சுகள் (40 கோழிக் குஞ்சுகள் வீதம்) 50% மானியத்தில் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் 350 பயனாளிகளுக்கு தலா ரூ.35,000 மதிப்பில் கறவை மாடு வழங்க திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட பசுந்தீவனங்கள் கால்நடைகளுக்கு அப்படியே வழங்கினால் முழுமையான பலன் கிடைக்காது என்பதன் அடிப்படையில் அதனை சிறு சிறு துண்டுகளாக வெட்டி வழங்கும்பட்சத்தில் எளிதில் ஜீரணம் அடைந்து கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் உற்பத்தி திறன் பெருகும். இதனால் கால்நடை வளர்ப்போர் பயனடைவார்கள். இதற்காக சேலம் மாவட்டத்தில் இன்றைய தினம் 2024–2025 ஆம் நிதியாண்டில் 210 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.60.91 இலட்சம் மதிப்பீட்டில் மின் விசையால் இயங்கும் புல் நறுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் காவலனாக இது போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களின் வாயிலாக பயனடைந்த பயனாளிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. அர.பிரகாசம், துணை இயக்குநர் மரு.தமிழரசு, உதவி இயக்குநர் மரு.ரகுபதி, மாமன்ற உறுப்பினர் திருமதி.கிரிஜா குமரேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

# மதுராந்தகம் நகரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம்!

## மலர்விழிகுமார் தலைமை! கே.குமார் முன்னிலை!

*மதுராந்தகம், ஜூலை. 22 -*

மதுராந்தகம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நேற்று நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து, மனுக்களைப் பெற்றார். இதில் நகர்மன்றத் தலைவர் மலர்விழிகுமார் தலைமை தாங்கினார். நகரச் செயலாளர் கே.குமார் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் நேற்று காலை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த முகாமிற்கு நகர மன்ற தலைவர் மலர்விழி குமார் தலைமை தாங்கினார்.

மன்ற உறுப்பினரும் நகர செயலாளருமான கே. குமார், மன்ற உறுப்பினர் சித்ரா கங்காதரன் ஆகியோர் முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையர் அபர்ணா அனைவரும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார்.

இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கு ஒவ்வொருவரும் தங்களது சுய விவர படிவத்தினை பூர்த்தி செய்து அங்கேயே இணையதளத்தில் பதிவு செய்தனர். மேலும் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, காவல்துறை, கல்வித்துறை, சுகாதார;த துறை, வேளாண்துறை உள்ளிட்ட துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டு அப்பகுதி மக்களிடம் 985 மனுக்களை பெற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நகராட்சி நிர்வாகம் செய்திருந்தது.



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நேற்று காலை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த முகாமிற்கு நகர மன்ற தலைவர் மலர்விழி குமார் தலைமை தாங்கினார். மாமன்ற உறுப்பினரும் நகர செயலாளருமான கே. குமார், மன்ற உறுப்பினர் சித்ரா கங்காதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி ஆணையர் அபர்ணா அனைவரும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார். இந்த முகாமில் 985 மனுக்களை பெற்றனர்.